Mediacorp Seithi Tamil News, Thursday, 22 Apr 2022

சிங்கப்பூர்

# எரிசக்தித் துறையின் புதிய நிறுவனங்களுக்கு உதவும் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்

வாசிப்புநேரம் - 1 நிமிடம்




(படம்: Calvin Oh)

வெளியீடு : 21 Apr 2022 10:21PM
புதுப்பிப்பு : 21 Apr 2022 10:21PM

Aa

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், தூய்மைத் தொழில்நுட்பத் துறையில் தீர்வுகளைத் துரிதப்படுத்த இரண்டு புதிய ஆய்வுக்கூடங்களை அறிமுகம் செய்துள்ளது.

புதிதாக எரிசக்தித் துறையில் கால்பதிக்கும் நிறுவனங்களுக்கு அவை ஆதரவுக்கரம் நீட்டும்.

EcoLabs எரிசக்திப் புத்தாக்க நிலையத்துடனான பங்காளித்துவத்தின் கீழ் ஆய்வுக்கூடங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

EcoLabs Digital Twin Co-Innovation Lab, NTU-Arrow Invent Joint Lab எனும் அந்த இரண்டு ஆய்வுக்கூடங்களும் JTC CleanTech Oneஇல் அமைந்திருக்கும்.

புதிய எரிசக்தி, குறைந்த கரிமத் தொழில்நுட்பம் தொடர்பிலான ஆய்வுகளை அவை மேற்கொள்ளும்.

புதிய எரிசக்தி நிறுவனங்களும் சிறிய-நடுத்தர நிறுவனங்களும் உள்ளூரில் புத்தாக்க முயற்சிகளை மேற்கொள்ள EcoLabs ஆய்வுக்கூடம் கைகொடுக்கும்.

EcoLabs ஆய்வுக்கூடத்தின் கீழ் தற்போது 5க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பயன்பெறுகின்றன.

அத்துடன் NTU-Arrow Invent ஆய்வுக்கூடம் புதிய வர்த்தகங்களுக்கும் சிறிய-நடுத்தர நிறுவனங்களுக்கும் உதவக்கூடிய அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆய்வுக்கூடங்களை வர்த்தக, தொழில் துணையமைச்சர் லோ யென் லிங் பார்வையிட்டார்.

புதிய நிறுவனங்களின் பொருள்களையும் சேவைகளையும் சந்தைகளுக்குத் துரிதமாகக் கொண்டுசெல்ல ஆய்வுக்கூடங்கள் உதவும் என்றார் அவர்.

விளம்பரம்

00:30

விளம்பரம்



Copyright 2022 © Mediacorp Pte Ltd. All rights reserved.